# பளுகல் முதல்நிலை பேரூராட்சி

## கன்னியாகுமரிமாவட்டம்

ந.க.எண்.234/2022/அ1 நாள் : 13.07.2022

## மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் முதல்நிலை பேரூராட்சியில் 2022–2023 –ஆம் ஆண்டு கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தில் மின்கலன் (Battery Operated Vehicle) மூலம் இயங்கும் வாகனம் கொள்முதல் செய்திட தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி செயல்அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 29.07.2022–ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 28.07.2022 –ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 5.00 மணிவரை அதற்குரிய தொகையை கீழ்க்கண்டுள்ள விவரப்படி பளுகல் முதல்நிலை பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி (வரிஉட்பட) பெற்றுக்கொள்ளலாம் .

ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும் திறப்புதேதி மற்றும் நேரவிவரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளியுடன் பணிக்கான வைப்புதொகையினை Executive Officer, Palukal Town Panchayat என்ற பெயரில் வங்கி வரைவோலையாக எடுத்து இணைத்து அனுப்பவேண்டும்.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை 01.08.2022 – ஆம் தேதி திங்கள்கிழமை செயல்அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும்.

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | வைப்பு தொகை | ஒப்பந்தப்புள்ளி படிவ கட்டணம் | பணிமுடிக்கவேண்டியகால அளவு |
|---|---|---|---|---|---|
| 1 | **மின்கலன்** (Battery Operated Vehicle) **மூலம் இயங்கும் வாகனங்கள் 11 எண்ணம் கொள்முதல் செய்தல்.** | 17.05 | 17050.00 | 6720.00 | 30 நாட்கள் |

### நிபந்தனைகள்

1. மின்கலன் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்திட அமைக்கப்பட்ட துணைக்குழுவில் மின் கலன் (Lead Acid Battery) மூலம் இயங்கும் வாகனத்திற்கு விவரக் குறிப்புகளின் படி (Specification) வாகனங்கள் இருக்கவேண்டும். மேலும், மின்கலன் (Lead Acid Battery) வாகனத்திற்கு

ஒருவண்டியின் அடிப்படைவிலை G.S.T (5 சதவீதம்) நீங்கலாக ரூ. 1.55 இலட்சம் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், இந்த விலைக்குப்பட்டு ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்படவேண்டும்.

2. தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தபுள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 இன் படி ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படும்.
3. ஒப்பந்தப்புள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் கொள்முதல் ஆணை வழங்கிய மூன்று தினங்களுக்குள் ரூ.100/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்படவேண்டும்.
4. மின்கலன் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்தவுடன் செயற்பொறியாளரால் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு துணைக்குழு அனுமதி வழங்கியுள்ள விவரக்குறிப்புகள்படி (Specification) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்தவுடன் செயற்பொறியாளரால் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, துணைக்குழு அனுமதி வழங்கியுள்ள விவரக்குறிப்புகள் (Specification) மற்றும் விலைவிகிதம் (Rate) அடிப்படையில் பரிசீலனை செய்து தகுதிச்சான்றிதழ் அளித்த பின்னரே சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உரியவிதிமுறைகளின் படி பட்டியல்தொகை வழங்கப்படும்.
5. உரியகாலத்திற்குள் வாகனங்கள் விநியோகம் செய்ய தவறினால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புதொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.
6. வாகனங்கள் விநியோகம் செய்யப்பட்ட ஓராண்டு காலத்திற்கு வாகனத்தில் ஏற்படும் குறைபாடுகளை சம்மந்தப்பட்ட நிறுவனத்தாரே தனது சொந்த செலவில் சீரமைக்கும் வகையில் நிபந்தனைகள் ஒப்பந்தபத்திரத்தில் இடம் பெறவேண்டும்.
7. ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளிகளுடன் சென்ற ஆண்டு முடிய வருமானவரி மற்றும் சரக்கு சேவைவரி செலுத்திய சான்றினை இணைத்தல் வேண்டும்.
8. ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனங்கள் சம்மந்தப்பட்டபணிக்கு மூன்றாண்டுகளுக்கு குறையாமல் முன் அனுபவம் உள்ளதற்கான ஆவணங்கள் இணைக்கப்படவேண்டும்.
9. ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்படும் போது விற்பனைவரிதுறையில் பதிவுபெற்றுள்ளதற்கான சான்று இணைக்கப்படவேண்டும்.
10. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது. பேரூராட்சி மன்றஒப்புதலுக்கு பிறகு கொள்முதல் ஆணை வழங்கப்படும். பணிஆணை வழங்கப்படும் போது கூடுதல் 1% வைப்புதொகை செலுத்தப்படவேண்டும்.
11. கொள்முதல் செய்யப்பட்ட வாகனங்களுக்கு பட்டியல்தொகை வழங்கப்படும்போது வேலைமுடிவு இறுதி பட்டியலில் 4 % காப்புதொகை, 1% வருமானவரி, 2% சரக்கு மற்றும் சேவைவரி மற்றும் 1 % தொழிலாளர் நலநிதியும் பிடித்தம் செய்யப்படும்.
12. அடித்தல், திருத்தல் இன்றி முறையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் வைப்புதொகை இன்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை ஏதும் இன்றி தள்ளுபடி செய்யப்படும்.
13. செலுத்தப்படும் வைப்புத்தொகை தணிக்கை முடிந்து, தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் திருப்பி வழங்கப்படும்.

14. ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் https://www.tenders.tn.gov.in என்ற இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவிறக்கம் செய்து ஒப்பந்தப்புள்ளி அளிக்கலாம்.
15. இதர நிபந்தனைகள் அலுவலக வேலைநாட்களில் வேலைநேரங்களில் நேரில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

செயல் அலுவலர்,
பளுகல் முதல்நிலை பேரூராட்சி.

பெறுநர்

1. பதிவுபெற்றஒப்பந்ததாரர்கள்
2. அலுவலகஅறிவிப்புபலகைக்கு

<u>நகல்கள்:</u>

1. அலுவலக விளம்பரபலகை.
2. மாவட்ட ஆட்சித் தலைவர் கன்னியாகுமரி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.
3. உதவிஇயக்குநர், நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகள் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.
4. உதவிசெயற்பொறியாளர், பேரூராட்சிகள் கன்னியாகுமரிமண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
5. துணைகண்காணிப்பாளர் ஊழல் மற்றும் லஞ்சஒழிப்புதுறை, கன்னியாகுமரி மாவட்டம்.
6. இளநிலை பொறியாளர், களியக்காவிளைபேரூராட்சி.
7. சம்பந்தப்பட்டகோப்பு.